**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**HMOP NO.92/2022**

| | |
|---|---|
| பெயர் | .. இராஜகோபால் (மசா.1) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2026 ஆண்டு ஜனவரி மாதம் 23 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் மகபத்நிஷா அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை:**

எனது பெயர் இராஜகோபால். நான் மேற்படி முகவரியில் குடியிருக்கிறேன். நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். HMOP No.184/2022 மனுவில் எதிர் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பு முதல்விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விசயங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எங்கள் திருமண அழைப்பிதழ் அசல் **மசாஆ.1,** திருமண போட்டோ **மசாஆ.2.** கழுகுமலை முருகன் கோவில் நிர்வாக அதிகாரி வழங்கிய திருமண சான்று **மசாஆ.3.** எனது ஆதார் அட்டை நகல் **மசாஆ.4** (அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்படுகிறது). திருநெல்வேலி தன்வந்திரி மருத்துவமனையில் எதிர்மனுதாரருக்கு வழங்கிய மருந்து சீட்டு **ம.சா.ஆ.5**. நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் மனுவில் நான் கோரும் பரிகாரம் வழங்கியும், எதிர் மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் HMOP No.184/2022 யை தள்ளுபடி செய்தும் உத்தரவிடுமாறு பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை** : எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.